செ. கு. எண்: 76

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 14.3.2013

ஜம்மு காஷ்மீர் மாநிலம், ஸ்ரீநகர், பெமினா பகுதியில் அமைந்துள்ள மத்திய பாதுகாப்பு படை வீரர்கள் முகாம் மீது 13.3.2013 அன்று தற்கொலை படை தீவிரவாதிகள் நடத்திய திடீர் தாக்குதலில், மதுரை மாவட்டம், பேரையூர் அருகே உள்ள தும்மநாயக்கன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த மத்திய பாதுகாப்பு படை வீரர் திரு. பெருமாள் அவர்கள் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் ஆற்றொணாத் துயரமும், மிகுந்த மன வேதனையும் அடைந்தேன்.

தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்த திரு. பெருமாள் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய பாதுகாப்புப் படை வீரர் திரு பெருமாள் அவர்களின் உடலை அவரது சொந்த ஊருக்கு எடுத்துச் செல்வதற்குரிய அனைத்து உதவிகளையும் தமிழக அரசு செய்ய நான் உத்தரவிட்டுள்ளேன்.

மேலும், திரு. பெருமாள் அவர்களின் உடல் மீது மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்துமாறும், அவருடைய குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுமாறும் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் மற்றும் மதுரை மாவட்ட ஆட்சியர் ஆகியோருக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்,

தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்த பெருமாள் அவர்களின் குடும்பத்திற்கு ஐந்து லட்சம் ரூபாய் வழங்கவும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**